ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1553/19 - 2008 ජුනි 11 වැනි බදාදා - 2008.06.11
*1553/19 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டம்*

**7 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

மேல் மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி திருத்தப்பட்டவாறான நியதிச் சட்டத்தின் பிரிவு 7(1) ஆம் பிரிவினால் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாண சபையின் முதல் அமைச்சரும் அத்துடன் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி, போக்குவரத்து, தொழில்துறை, கலை மற்றும் கலாசார அலுவல்கள் தொடர்பான அமைச்சர் பேஸ்தேருவே லியனராலலாகே ரெஜினோல்ட் ரொஸ்மன்ட் குரே விஜயவர்ணசூரிய ஆகிய நான், அந்தப் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டு 1990.11.20 ஆந் திகதிய 637/8 ஆம் இலக்க, அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் அப்பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்டு 2006.12.19 ஆந் திகதிய 1476/11 ஆம் இலக்க, அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்கள் இறுதியாக திருத்தப்பட்டதுமான கட்டளைகளையும், 1998.06.23 ஆந் திகதிய 1033/6 ஆம் இலக்க, அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளையும் 2008.07.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்படி கீழ் காணப்படுமாறு திருத்துகிறேன் :

பேஸ்தேருவே லியனராலலாகே ரெஜினோல்ட்
ரொஸ்மன்ட் குரே விஜயவர்ணசூரிய,
முதல் அமைச்சர் அத்துடன்
நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம்,
கல்வி, போக்குவரத்து, தொழில்துறை, கலை மற்றும் கலாசார அலுவல்கள்
தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

முதல் அமைச்சர் பணிமனை,
மேல் மாகாண, மாகாண சபை,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2008, யூன் 10.

| | விடயங்கள் | வீதமுறை வரி % |
|---|---|---|
| (அ) | இரத்தினக் கற்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (ஆ) | அரிந்த பலகை அல்லது அரியாத மரக்குற்றிகளை விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (இ) | பெறுமதிவாய்ந்த அல்லது அரைப் பெறுமதிவாய்ந்த கற்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (ஈ) | மரத்தளபாடங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (உ) | தங்கத்தை விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (ஊ) | நகைகளையும் அலங்கார ஆபரணங்களையும் விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (எ) | மதுபானம் (பதப்படுத்தப்பட்ட மது, கலக்கப்பட்ட மது உள்ளடங்கலாக) பியர், வையின், கள்ளு அத்துடன் இறக்குமதி செய்த அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்த மதுபான வகைகள் ஆகியவற்றை விற்பனை அல்லது கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (ஏ) | சிகரட் உற்பத்தியாளரினால் அல்லது சிகரட் இறக்குமதியாளரினால் விற்பனை அல்லது கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (ஒ) | எல்லா வகையான மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, பொருளை இழுத்துச் செல்லும் பகுதி உள்ள அல்லது இல்லாத இழுவை இயந்திரம், கை இழுவை இயந்திரம் ஆகியவற்றை விற்பனை அல்லது கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 5 |
| (ஐ) | பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய், கிறீஸ் போன்ற உராய்வு நீக்கி எண்ணெய் ஆகியவற்றை விற்பனை அல்லது கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 2 |
| (ஓ) | மேலே குறிப்பிடப்பட்டுள்ள (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ) மற்றும் (ஒ) பகுதிகளில் குறிப்பிடப்படாத வேறு எந்த பொருளையோ அல்லது உற்பத்தியையோ கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தின் புரள்வு தொடர்பாக | 1 |

6-502/1

---

**மேல் மாகாண மாகாண சபை**

*98 (3)* **ஆம் பிரிவின் கீழான கட்டளை**

மேல் மாகாண மாகாண சபையின் 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நிதி திருத்தப்பட்டவாறான நியதிச் சட்டத்தின் பிரிவு 98(3) ஆம் பிரிவினால் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாண சபையின் முதல் அமைச்சரும் அத்துடன் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி, போக்குவரத்து, தொழில்துறை, கலை மற்றும் கலாசார அலுவல்கள் தொடர்பான அமைச்சர் பேஸ்தேருவே லியனராலலாகே ரெஜினோல்ட் ரொஸ்மன்ட் குரே விஜயவர்ணசூரிய ஆகிய நான், அந்தப் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டு 2008.04.04 ஆந் திகதிய 1543/39 ஆம் இலக்க, அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பிரமாணங்கள், கட்டளைகளை 2008.06.10 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்படி கீழ் காணப்படுமாறு திருத்துகிறேன் :

உப பந்தி (1) ஐ அகற்றி அதற்காக பின்வருமாறு உப பந்தியினைப் பிரதியிடுவதன் மூலம் :-

(1) மேல் மாகாணத்தினுள் நடாத்தப்படும் பரிசுப்போட்டி ஒவ்வொன்றிலும் பரிசுகளின் மொத்த சந்தைப் பெறுமதியின் மீது பின்வரும் முறையில் வீதமுறை வரியொன்று கணிப்பிடப்படும் :

| பரிசுகளின் மொத்தப் பெறுமதி | வீதமுறை வரி |
|---|---|
| ரூபா ஒரு இலட்சத்தினைவிடக் குறைவு | வரிவிலக்களிப்பு |
| பரிசுகளின் மொத்த சந்தைப் பெறுமதியின் மீது வீதமுறை வரியொன்று கணிப்பிடப்படும் : | 20% |

பேஸ்தேருவே லியனராலலாகே ரெஜினோல்ட்
ரொஸ்மன்ட் குரே விஜயவர்ணசூரிய,
முதல் அமைச்சர் அத்துடன் நிதி,
திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி,
போக்குவரத்து, தொழில்துறை, கலை மற்றும் கலாசார அலுவல்கள்
தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

முதல் அமைச்சர் பணிமனை,
மேல் மாகாண மாகாண சபை,
"சிராவஸ்தி மந்திரய",
கொழும்பு 7,
2008, யூன் 10.

6-502/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.